**கம்பஹா மாநகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி மாநகர சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பஹா மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதி உதவியின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட 09 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 4,674,849 தொகை கடன்பட்டோரின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபை நிதி உதவி செயற்திட்டப் பெறுமதியை விஞ்சி ரூபா 1,585,437 தொகை நிலுவை வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுக் களஞ்சிய இருப்பு மெய்மையாய்வு மீதியான ரூபா 8,369,662 தொகைக்குப் பதிலாக ரூபா 8,567,764 தொகையான இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும், நன்கொடையாக 03 நிறுவனங்களிலிருந்து கிடைத்த 04 நிலையான சொத்து வகைகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 86,548 தொகையான இருப்புக்களின் இழப்பு பெறுமதி கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களுக்கும் பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 3,087,138 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்பு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான நிதி உதவியின் மூலமான பங்களிப்பு என்ற கணக்குகளின் கூட்டுத்தொகைக்கும் நிலையான சொத்துக் கணக்குகளின் கூட்டுத்தொகைக்குமிடையே ரூபா 2,102,442 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்திய மீதியான ரூபா 8,091,962 இல் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதியில் ரூபா 8,021,962 தொகை அறவிட வேண்டியிருந்தது.

(ii) 2008 நவம்பர் 28 ஆந் திகதி கிடைத்த ரூபா 18,250 தொகையான காசோலையொன்று மதிப்பிழந்திருந்த போதிலும், அதற்காக 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கில் ரூபா 13.500 தொகையொன்று 06 வருடங்களுக்கு முன்னிருந்து தொடர்ச்சியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

2016 சனவரி மாதத்தின் போது ரூபா 51,750 தொகையொன்று குறித்த தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் அதற்கான சான்றொன்று சபைக்கு கிடைத்தமைக்கான சான்று காணப்படவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டம் | - | ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரி மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571(2) | 17,148,718 | 02 வருடங்களை விஞ்சிய வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 756(2) | - | மெய்மையாய்வுச் சபையை உரிய பிரகாரம் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 756(5) அ, ஆ | - | மெய்மையாய்வுச் சபையினால் பயன்படுத்த வேண்டிய பொது மாதிரிப்படிவம் பொருள் மெய்மையாய்விற்காக பயன்படுத்தப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,534,963 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,762,544 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** |
| வீதவரியும் வரியும் | 64,566,458 | 64,640,457 | 65,825,622 | 44,533,775 | 63,657,500 | 63,062,050 | 62,648,459 | 45,354,444 |
| வாடகை | 30,502,956 | 37,312,145 | 22,866,353 | 27,875,217 | 23,560,250 | 22,745,096 | 21,111,864 | 13,392,325 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,517,800 | 4,522,214 | 4,504,214 | 286,225 | 4,364,250 | 3,828,358 | 3,837,508 | 268,225 |
| ஏனைய வருமானம் | 272,216,844 | 260,215,722 | 274,118,325 | 201,486,626 | 387,965,880 | 338,170,804 | 278,016,434 | 215,389,229 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 34,081,661 தொகையான நிலுவை வீதவரியும் வரியும் மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,055,751 தொகை, 05 - 10 வருடங்களுக்கு இடையிலான ரூபா 11,707,321 தொகை, 2 - 5 வருடங்களுக்கிடையிலான ரூபா 10,353,664 தொகை மற்றும் 1 - 2 வருடங்களுக்கிடையிலான ரூபா 9,964,924 தொகையான மீதிகள் என்பன காணப்பட்டன. இந்த நிலுவை மீதியை அறவிடல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வியாபார வரி

05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்ற ரூபா 442,650 வியாபார வரி மீதியொன்று காணப்பட்டதுடன் இந்த நிலுவை மீதியில் மீளாய்வாண்டின் போது அறவிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10,966,320 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 44,250,130 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதி

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆவது பிரிவின் கீழ் 32 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதி விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 18 விடயங்களுக்காக மாத்திரமே உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

விதிக்கப்பட்டிருந்த உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய 08 இலக்குகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்

கீழே குறிப்பிடப்படுகின்ற இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| | இலக்குகள் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்பட்ட திகதி | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ----------------- | ---------------- | ---------------- | ----------------------- | ----------------------- |
| (i) | யக்கல கிழக்கு வெருள்ள வத்த பிரதான வீதியின் பொது குளிக்கும் கிணறை அமைத்தல் | 154,596 | 2017-08-10 | ஆரம்பிக்கப் படவில்லை | மோசமான காலநிலை |
| (ii) | அளுத்கம்கொட கிராதத்திற்குச் செல்லும் வீதி அபிவிருத்தி | 500,000 | 2017-08-10 | ஆரம்பிக்கப் படவில்லை | - |
| (iii) | பூகோள தகவல் முறைமைத் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றைப் பயன்படுத்தி கம்பஹா மாநகர சபையின் அலுவில நடவடிக்கைகளில் இயலளவை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 1,000,000 | குறிப்பிடப் படவில்லை | ஆரம்பிக்கப் படவில்லை | தகவல்களைச் சேகரித்தலில் தாமதம் |

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற கழிவுப்பொருட்கள், அதிகாரப்பிரதேசத்திற்கு வெளியேயுள்ள தனியார் காணியொன்றில் கொண்டு போடுவதற்காக அந்தக் காணி உரிமையாளர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 01 தொன் கழிவுப்பொருளுக்கு ரூபா 2,350 தொகை செலுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும், சபையினால் கழிவுப்பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்ற ரெக்டர் லோட் இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட அளவிடைகளுக்குப் பதிலாக முறையற்ற திட்டமுறைமையொன்றை அடிப்படையாகக் கொண்டும் மற்றும் விலைப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமலும் 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 10,786,500 தொகை தனியார் காணி உரிமையாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பான சபை அறிந்திராமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான விருந்தினர் விடுதிக் காணியில் அமைந்துள்ள சந்தைத் தொகுதியை வாடகைக்கு வழங்கும் உடன்படிக்கையின் பிரகாரம் 2017 செப்தெம்பர்

முதல் 2018 சனவரி வரையான 05 மாதங்களுக்குரியதாக அறவிட வேண்டிய மாதாந்த வாடகைப் பணமான ரூபா 4,447,710 தொகையினை சிட்டையிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்பட்ட கட்டணம், அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட திகதி, அனுமதிப்பத்திரம் கையேற்கப்பட்டமைக்கான விபரங்களை உள்ளடக்கி முறையான அனுமதிப்பத்திரப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 19 தொழில்முயற்சிகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் 10 தொழில் முயற்சிகளுக்காக மாத்திரமே அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினரை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகையான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 09 | 05 | 04 | - |
| மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| இரண்டாம் நிலை | 112 | 126 | 09 | 21 |
| ஆரம்ப நிலை | 233 | 203 | 30 | - |
| | 357 | 336 | 44 | 21 |

நகர கணக்காளரில் 02 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு பதவி 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது.

### (ஆ) ஊழியர் கடன்

(i) பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய 15 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 188,261 ஆக இருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 270,938 ஆகும்.

(ii) சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருக்கின்ற ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய வீட்டு வாடகையான ரூபா 78,702 தொகை ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றமை, மரணமடைந்தமை அல்லது பணியிடமாற்றம் பெற்றுச் சென்றமை போன்ற காரணங்களின் அடிப்படையில் சில வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2016 ஆம் ஆண்டு முதல் உடைந்த நிலையில் காணப்பட்ட 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வில் விற்பனை செய்வதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்ட கல்உறுகளை, உடைந்த டோலர், 02 வீதிச் செப்பனிடுகை, மின்பிறப்பாக்கி மற்றும் புல்வெட்டும் மெசின் என்பவற்றை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

2015 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி அமைச்சிலிருந்து நகர சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 26,891,063 பெறுமதியான 03 மோட்டார் வாகனங்கள் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், உரித்தை சபைக்கு கையேற்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.4.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

(அ) பதிவேட்டுப் பொருட்கள் தொடர்பாக பொருள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 4,009 பெறுமதியான 34 புத்தகங்கள் தொலைந்து போயிருந்ததுடன் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ரூபா 48,359 பெறுமதியான 308 புத்தகங்களும் காணப்பட்டன.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வர்ண மீன்களை உருவாக்கும் செயற்திட்டம்**

வறுமையை ஒழிக்கும் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,000,000 தொகையான பொறியியல் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வர்ண மீன்களை உருவாக்கும் செயற்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) தயாரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு சமமான திட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அளவிடை அலகுகளில் குறிப்பிடப்படாமல் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) இந்த செயற்திட்டத்திற்காக ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்யும் போது 2012 சனவரி 05 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2012 இனை அடிப்படையாகக் கொண்டு சனசமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக நேர் ஒப்பந்த கையளித்தல் முறைமையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நலனாளிகளுக்கு மீன் வளர்க்கும் சீமெந்து தாங்கி நிர்மாணித்து வழங்க வேண்டியிருந்த போதிலும், 06 நலனாளிகளுக்கு தாங்கி நிர்மாணிக்கும் மூலப்பொருட்கள் மாத்திரம் வழங்கி

ஒரு தாங்கிக்கு ரூபா 20,000 வீதம் 12 தாங்கிககளுக்கு ரூபா 240,000 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) யக்கல கடைத்தொகுதி நிர்மாணம்**

2009 சனவரி 02 ஆந் திகதி முதல் 09 மாத காலத்தில் யக்கல கடைத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், இந்த கடைத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2009 ஏப்ரல் 09 ஆந் திகதி முதல் 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையான காலத்தில் 20 சதவீத முற்பணத்தையும் உள்ளடக்கி ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூபா 70.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 வரையிலும் முற்பணத் தொகையில் ரூபா 12 மில்லியன் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) ஆதன வரி மற்றும் கடை வாடகை மதிப்பீடு செய்யப்படாமை. |
| | (ii) குறைவாகப் பயன்படுத்தப்பட்ட கடைகள் காணப்பட்டமை. |
| | (iii) ஆதன வரி மீள்திருத்தம் செய்யப்படாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) பாதீடு நடைமுறைக்கு இணங்காமை |
| | (ii) முறையற்ற பிரகாரம் செலவின விடயங்களுக்கிடையே நிதி மாற்றப்பட்டமை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) இருப்புக்களை கொள்வனவு செய்யும் போதும், விநியோகிக்கும் போதும், பதிவேடுகளில் உள்ளடக்கப்படாமை |
| | (ii) பௌதீக ரீதியில் காணப்படாத சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டமை |
| | (iii) சொத்துக்களுக்குரிய உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை காணப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iv) | நிலையான சொத்துக்களை கணக்கு வைக்கும் கொள்கையொன்று காணப்படாமை. |
| | | (v) | பொருட் பதிவேடு பேணப்படாமை |
| (உ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி வழங்குவதற்கு மக்களுக்கு தெளிவுபடுத்துதல் போதியளவில் காணப்பட்டாமை |
| | | (ii) | கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கான செலவினம் அதிகமாக இருந்தமை |